# தொழில் அமைச்சு

# தொழில் திணைக்களம்

## தொழில் திணைக்களத்தில், மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர்- தொழில்நுட்பச் சேவைத்தர வகைப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021

தொழில் அமைச்சின் கீழுள்ள தொழில் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பச் சேவைத்தர வகைப் சேவையின் 2021.03.31 இல் வெற்றிடமாக உள்ள பின்வரும் பதவிகளுக்கு, பொதுச் சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில், 2021 ஓகத்து 13 என்னும் முடிவுத் திகதியில், இவ்வறிவித்தலின் பந்தி 3.0 இல் குறிப்பிட்டவாறு உரிய தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.0 ˙ பதவிகள் மற்றும் வெற்றிடங்கள்

| இல. | பதவியின் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | விரல் அடையாளம் பரிசோதிக்கும் அலுவலர் | 1 |
| 2 | ஆராய்ச்சி உதவியாளர் | 1 |
| 3 | கட்டிடப் பரிசோதகர் | 1 |
| 4 | படவரைவாளர் | 1 |

1.1 பதவிக்கான கடமையின் தன்மை: நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையமாகும் ( எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் ஓய்வூதிய திட்டம் தொடர்பில் எடுக்கப்படும் கொள்கை முடிபுகளுக்கு உட்படும்)

1.2 கடமையின் தன்மைகள்

| அங்கீகரிக்கப்பட்ட பதவி | கடமைகள் |
|---|---|
| 1. விரல் அடையாளம் பரிசோதிக்கும் அலுவலர் | ஊ.சே.நி. கோரலின் போதுஆள்அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாத மற்றும் கொடுப்பனவுத் தொகை கூடிய தொகையாகவும் இருக்கும்நிலைமைகளின் உரிய பிரிவுகளினால் உதவி கோரப்படும் போது விண்ணப்பத்திலுள்ள மற்றும் ‘‘ஏ ‘‘ , ‘‘பீ ‘‘, ‘‘எச்‘‘ படிவங்களில் உள்ள விரல் அடையாளங்களை பரிசோதித்தல் மற்றும் விரல் அடையாளம் பரிசோதிப்பதற்குப் பயிற்சி கொடுத்தல், திணைக்களத்தலைவரால் கொடுக்கப்படும் பிற பணிகளை நிறைவேற்றுதல். |

| | |
|---|---|
| 2. ஆராய்ச்சி உதவியாளர் | வேலைத்தலங்களில் தொழில்கள் தொடர்பான சுற்றுச்சூழல் அளவைகள், உயிரியல் அளவைகள் மற்றும் விஞ்ஞான ரீதியான அளவைகள் ஆகியவற்றை எடுப்பதில் ஆராய்ச்சி அலுவலர் (தொழிற் சுகாதாரம்), சிரேட்ட ஆராய்ச்சி அலுவலர் (தொழிற் சுகாதாரம்), பிரதி ஆணையாளர் (தொழிற் சுகாதாரம்) ஆகியோருக்கு உதவுதல். (தொழிற் சுகாதாரம்), சூழல்களுக்கான பௌதீக அளவைகளை எடுப்பதற்கான உபகரணங்களின் சிறந்த செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாயிருத்தல். அவ்வுபகரணங்களின் பாவனையையும் பேணுகையையும் கவனித்தல். தொழிற்தலச் சூழலிலுள்ள இரசாயன அனர்த்தங்களின் தன்மையைத் தீர்மானிப்பதற்கான வளி மாதிரிகளைச் சேகரிக்கும் செயற்பாடுகளை ஒழுங்குசெய்தலும்,அவ்வாறு சேகரிக்கப்படும் மாதிரிகளைப் பரிசோதிப்பதற்குத் தயார் செய்தல். ஆய்வுகூட உபகரணங்களைப் பேணுதலும், அவற்றை முறையாகப் பயன்படுத்துவதில் ஆராய்ச்சி அலுவலர்களுக்கு உதவுதல். வேலைத்தலங்களில் தொழில் பற்றிய விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை மேற்கொள்ளும்போது, ஊழியர்களின் உடல்ரீதியான அளவீடுகளை எடுத்தலும், அவற்றை ஆராய்தலும். வேலைத்தலமொன்றில் ஊழியர்களின் இரைச்சலைத் தாங்கும் அளவுகள் மற்றும் அவர்களது சுவாச நிலைமை பற்றிய பரிசோதனைகளில் ஆராய்ச்சி அலுவலர்களுக்கு அவசியமானபோது உதவுதல். திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் வேறு கடமைகள். |
| 3. கட்டிடப் பரிசோதகர் | தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான தொழிற் செயலகக் கட்டிடத்தின், பிராந்திய தொழில் அலுவலகங்களின் புதுப்பித்தல் செயற்பாடுகள் மற்றும் புதிய கட்டிட வேலைகளின் மேற்பார்வை. வேலைகளுக்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளல். கட்டிட ஒப்பந்தக்காரர்களின் வேலைகளைப் பரிசோதித்தல். கட்டிடப் பொருட்களின் அளவுப் பட்டியல்களைத் தயாரித்தல். தொழில்நுட்ப அலுவலர்களின் வேலைகளை மேற்பார்வை செய்தல். |

| | |
|---|---|
| | திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் வேறு கடமைகள். |
| 4. படவரைவாளர் | பொறியியலாளரால் தயாரிக்கப்படும் திட்டங்களை வரைதல் திணைக்களத்தலைவரால் கொடுக்கப்படும் பிற பணிகளை நிறைவேற்றுதல். |

2.0 ஆட்சேர்ப்பு முறை

2.1 மேற்படி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு, பயிற்சிக்குரிய வகுப்பு (இரண்டு வருட பயிற்சிக்காலம்), பயிற்சிக்குரிய வகுப்பு (ஒரு வருட பயிற்சிக்காலம்), வகுப்பு III (நேரடி ஆட்சேர்ப்பு) ஆகிய 3 வகுப்புகளின் கீழ், விண்ணப்பதாரிகளின் தகைமைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு வகுப்பிற்கும் உரிய தகைமைகள் பந்தி 3.0 இல் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பிக்கும் வகுப்பு விண்ணப்பப் படிவங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

2.2 ஓர் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகள் மற்றும் பொதுவான ஒரு நேர்முகப்பரீட்சை ஆகியவற்றின் அடிப்படையில ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படும். தகைமை பெறும் பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்பட்டு, பொதுவானதொரு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆட்சேர்ப்பின் எண்ணிக்கையானது, எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளில், அவர்கள் எழுத்துப் பரீட்சையில் பெறும் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிலிருந்து தீர்மானிக்கப்பட எதிர்பார்க்கப்படுகிறது.

3.0 தகைமைகள்:

ஒவ்வொரு வகுப்பிற்குமுரிய தகைமைகள் பின்வருமாறு.

3.1 கல்வி மற்றும் வாண்மைத்துவத் தகைமைகள்.மற்றும் அனுபவம்

3.1.1 பயிற்சிக்குரிய வகுப்பு (இரண்டு வருட பயிற்சிக்காலம்)

(அ) கல்வித் தகைமைகள்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில், சிங்களம் / தமிழ் / ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாது சித்தியடைந்திருத்தல்.

(ஆ) அனுபவம்

உரிய துறையில் முதல்நிலை அல்லது அதற்கு மேற்பட்ட திணைக்கள நிரந்தரப் பதவியொன்றில் தொழில் திணைக்களத்தில் 10 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவை.

3.1.2 பயிற்சிக்குரிய வகுப்பு (ஒரு வருட பயிற்சிக்காலம்)

(அ) கல்வித் தகைமைகள்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில், சிங்களம் / தமிழ் / ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாது சித்தியடைந்திருத்தல்.

(ஆ) வாண்மைத்துவத் தகைமைகள்

i. மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து, இப் பதவிக்குரிய துறையில் ஒரு பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து, தொழில்நுட்பத்திற்கான தேசிய சான்றிதழைக் கொண்டிருத்தல் (உ-ம்: தொழில்நுட்பத்திற்கான தேசிய சான்றிதழ்: சிவில் / மின்னியல / ;இயந்திரவியல்).

அல்லது,

ii. மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து, படம்வரைதலில் ஒரு வருடப் பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து, உரிய சான்றிதழைக் கொண்டிருத்தல்.

அல்லது

iii. மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து, இப் பதவிக்குரிய துறையில் கைத்தொழில் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து, உரிய சான்றிதழைக் கொண்டிருத்தல்.

அல்லது

iv. உயர் கல்வி அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்களுடனான, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் தகைமைகளுக்கு ஒவ்வொரு விதத்திலும் சமமானதும், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதுமான வேறு ஏதாவது தொழில்நுட்பவியல் தகைமைகளைக் கொண்டிருத்தல். உரிய துறையில் 05 வருட அனுபவம்.

(இ) அனுபவம்

உரிய துறையில் முதல்நிலை அல்லது அதற்கு மேற்பட்ட அரச திணைக்கள நிரந்தரப் பதவியொன்றில் 10 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவை.

3.1.3 வகுப்பு III (நேரடி ஆட்சேர்ப்பு)

(அ) கல்வித் தகைமைகள்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில், சிங்களம் / தமிழ் / ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் இரு தடவைகளுக்கு மேற்படாது சித்தியடைந்திருத்தல்.

(ஆ) வாண்மைத்துவத் தகைமைகள்

பின்வரும் தகைமைகளுள் ஆகக்குறைந்தது ஒன்றையாவது ப᾽ர்த்தி செய்திருத்தல்.

I. மொரட்டுவ பல்கலைக்கழகத்தால் அல்லது அம்பாறை - ஹார்ட்லி தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா.

II. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பொறியியலில் தேசிய டிப்ளோமா.

அல்லது

III. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா.

அல்லது

IV. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட தொழில்நுட்பவியல் டிப்ளோமா.

அல்லது

V. இலங்கை, பொறியியலாளர்கள் நிறுவகத்தால் நடாத்தப்பட்ட பொறியியல் பரீட்சையின் பகுதி I வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

VI. உரிய துறையில் தேசிய தொழிற்பயிற்சித் தகைமையின் (NVQ) மட்டம் 6 ஐப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

VII. உயர் கல்வி அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்களுடனான, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் தகைமைகளுக்கு ஒவ்வொரு விதத்திலும் சமமானதும், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி

ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதுமான வேறு ஏதாவது தொழில்நுட்பவியல் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

(இ) அனுபவம்

உரிய துறையில் முதல்நிலை அல்லது அதற்கு மேற்பட்ட திணைக்கள நிரந்தரப் பதவியொன்றில்தொழில் திணைக்களத்தில் 05 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவை.

3.2 உடற்றகைமைகள்

நாட்டின் எப்பாகத்திலும் வேலை செய்வதற்குத் தேவையான மற்றும் உரிய பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குரிய உடற்றகைமை மற்றும் உளத்தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3.3 ஏனைய தகைமைகள்

I. முன்னைய நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் 01 /: 2020 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின் படி உரிய திகதியில் எந்தவித ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் உட்பட்டிருக்கலாகாது என்பதுடன் இது திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

III. . விண்ணப்பங்களைக் கோருகின்ற அறிவித்தலில் குறித்துக்கூறப்படுகின்ற திகதியன்று, குறித்துக்கூறப்படும் மற்றைய தேவையான எல்லாத் தகைமைகளையும் ஒவ்வொரு விதத்திலும் திருப்திப்படுத்தினால் மாத்திரமே, சேவைக்குரிய ஆட்சேர்ப்புக்கான எழுத்துப் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமைகளை விண்ணப்பதாரிகள் கொண்டிருப்பதாகக் கருதப்படுவார்கள்.

4.0 வயதெல்லை: பொருத்தமற்றது

5.0 வேலைக்குரிய நியதிகளும் சேவைக்குரிய நிபந்தனைகளும்

5.1 உரிய பயிற்சிக் காலத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பின்னர், பயிற்சிக்குரிய வகுப்பிற்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள், தொழில் ஆணையாளர் நாயகம் தீர்மானிக்கும் நிறுவனமொன்றால் நடாத்தப்படும் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும். அப்பரீட்சையில் சித்தியடைந்ததாக அந்நிறுவனத்தால் வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பிப்பதன் மீது, உரிய விண்ணப்பதாரி இச்சேவையின் வகுப்பு ஐஐஐ இற்கு உள்ளீர்க்கப்படுவார்.

5.2 மேற்படி பரீட்சையில் சித்திபெறத் தவறும் பயிற்சியாளர்களுக்கு மேலும் ஆறு மாதங்களுக்கும் மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு பயிற்சிக்காலத்தை நீடிப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் நடாத்தப்படும்

பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிற்சியாளர் தனது முன்னைய பதவிக்கு மீளச் செல்வதற்காக விடுவிக்கப்படுவார்.

5.3 வகுப்பு III இற்கான பதவி நிரந்தரமானதாகும். இப்பதவி 03 வருடங்களுக்கான தகுதிகூர் காலத்திற்கு உரியதாகும். தகுதிகாண் காலத்தில் ஒதுக்கப்பட்ட கடமைகளை செய்து முடித்தல் மற்றும் ஒழுக்கத்தை பேணுதல் என்பன திருப்தியானது என உறுதிப்படுத்தப்படின் தகுதிகாண காலத்தின் பின்னர் அவரது பதவியானது நிரந்தரமாக்கப்படும்.

5.4 பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 18/2020 மற்றும் அதனுடனான சுற்றறிக்கைகள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கமைவாக, சேவைக்குச் சேரும் மொழிக்கு மேலதிகமான மற்றைய அரசகரும மொழியிலான தேர்ச்சி, பதவிக்கு நியமிக்கப்பட்டு 3 வருட காலத்தினுள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

5.5 இந்த நியமனமானது, பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், தாபனக் கோவையின் ஏற்பாடுகள் அவற்றுக்கு இனிமேல் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், நிதிப் பிரமாணங்கள், திணைக்களக் கட்டளைகள், 2015 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 1930/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புகள், 2017-03-07 இல் பொதுச் சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்படும் நியதிகளும் நிபந்தனைகளும், சேவைப் பிரமாணக் குறிப்பிலும் ஆட்சேர்ப்புத் திட்டத்திலும் இனிமேல் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் ஆகியவற்றுக்கு உட்பட்டதாக இருக்கும்.

5.6 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் கொழும்பு 05, நாராஹேன்பிட்டியில் அமைந்துள்ள தொழிற் திணைக்களத் தலைமை அலுவலகத்திலேயே கடமையாற்றுதல் வேண்டும்.

6.0 சம்பள அளவுத்திட்டம்-

6.1 பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 03/2016 இன் அட்டவணை 1 இன் பிரகாரம், இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம், ரூ. 31,040 - 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10 x 750 – ரூ. 57550/= ஆகும்.

6.2 பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 03 / 2016 இன் பிரகாரம் பயிற்சிகுரிய வகுப்பிற்குரியவர்களுக்கான படி

1 ஆவது வருடம் - ரூ. 27,140/=

2 ஆவது வருடம் - ரூ. 27,440/=

6.3 பயிற்சிக்குரிய வகுப்பிற்குத் தெரிவுசெய்யப்படும் பயிற்சியாளர்கள் அவர்களது முன்னைய சம்பள அளவுத்திட்டத்தில் தற்காலிகமாக நிலையாக வைக்கப்பட்டு, பெறும் சம்பளத்திற்கு மேலதிகமாக, இலங்கை தொழில்நுட்ப சேவைக்கான ஆட்சேர்ப்பின் முதலாவது படியேற்றத்திற்குச் சமமான வருடாந்தப் படியொன்று

வழங்கப்படுவார்கள். இந்த நிலைமை பயிற்சிக் காலத்தின் இறுதியில் தொழில் திணைக்களத்தால் நடாத்தப்படும் பரீட்சையொன்றில் சித்தியடையும் வரை பேணப்படும். ஒரு அலுவலர் அவரது பயிற்சிக் காலத்தில் திருப்திகரமாக ஈடுபட்டிருந்தால் உயர்ந்த சம்பள நிலைக்கு இரண்டாவது வருடத்திற்கு ஏற்புடைய சம்பள அளவுத்திட்டத்தில் வைக்கப்படுவார் என்பதுடன் மேலும் படியும் கொடுக்கப்படும். பயிற்சிக் காலத்தினை திருப்தியாக முடித்த அலுவலர்கள் பயிற்சியின் முடிவின் போது நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைவார்களாயின் அவர்களது சம்பளமானது 2000.03.02 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 07/2020 ஆல் திருத்தப்பட்ட தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் நியதியின் பிரகாரம் மாற்றப்படும்.

7.0 எழுத்துப் பரீட்சை

(அ) எழுத்துப் பரீட்சையானது இரண்டு பாடங்களுக்கான வினாத் தாள்களைக் கொண்டிருக்கும். இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன், பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்கும் மொழியானது பின்னர் மாற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

| பாடம் | கால அளவு | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | 01 ½ மணித்தியாலம் | 100 | 40 |
| 2. துறை சார்ந்த தொழில்நுட்பப் பரீட்சை | 02 மணித்தியாலம் | 100 | 40 |

(ஆ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இரண்டு பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். எல்லாப் பரீட்சார்த்திகளும் நுண்ணறிவுப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் என்பதுடன், துறை சார்ந்த தொழில்நுட்பப் பரீட்சை ஆனது ஒவ்வொரு பரீட்சார்த்தியும் விண்ணப்பிக்கும் பதவிக்கு ஏற்ற வகையில் மாறுபடும். ஒவ்வொரு பதவிக்குமுரிய பரீட்சைப் பாடத்திட்டம் பந்தி 8.0 இல் தரப்பட்டுள்ளது.

(இ) நிரப்பப்படும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை, நியமனம் வழங்கப்படும் திகதி ஆகியன தொழில் ஆணையாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும்.

(ஈ) பல பரீட்சார்த்திகள் ஒரே அளவிலான மொத்தப் புள்ளிகளைப் பெற்றால், பொதுச் சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைய தொழில் ஆணையாளர் அதிபதியால் தீமானிக்கப்படும் என்பதுடன், இது தொடர்பில் இதுவே இதியான முடிபாகவும் இருக்கும்.

8.0 எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம் பின்வருமாறு.

| வினாத்தாள் | பாடத்திட்டம் |
|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | இவ் வினாத்தாள் பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான அறிவார்ந்த விடயங்கள், பகுப்பாய்வுத் திறன்கள், தீர்மானம் எடுக்கும் திறன் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் வினாக்களைக் கொண்டிருக்கும். |
| 1. துறை சார்ந்த தொழில்நுட்பப் பரீட்சை | (a) விரல் அடையாளம் பரிசோதிக்கும் அலுவலர்<br><br>i. விரல் அடையாள விஞ்ஞானத்தின் வரலாறு<br>ii. விரல் அடையாள விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பாளர்கள்<br>iii. விரலடையாளம் இருக்கும் இடம் மற்றும் தன்மைகள்.<br>iv. விரல் அடையாளம் பெற்றுக் கொள்வதன் முக்கியத்துவம்<br>v. விரல் அடையாளத்தின் வடிவங்கள்<br>vi. விரல் அடையாளங்களைப் பெற்றுக் கொளளல்<br>vii. ஆட்களின் அடையாளத்தை உறுதி செய்தல்<br>viii. ஆவணங்களில் உள்ள விரல் அடையாளங்களை ஒப்பிட்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்<br>ix. புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி விரல் அடையாளங்களை ஒப்பிடுதல். |

| | |
|---|---|
| | x. விரல் அடையாளத்தின் வடிவங்கள் மற்றும் முகடுகளின் தன்மைகள்<br>xi. விரல் அடையாளங்களின் பாகுபாடு<br>xii. விரல் அடையாளத்துடன் தொடர்பான சட்டங்கள்<br>(b) ஆராய்ச்சி உதவியாளர்<br>i. வேலையின் சூழல் அளவைகள், உயிரியல் அளவைகள், விஞ்ஞான ரீதியான அளவைகள் ஆகியவற்றை எடுப்பது பற்றிய அறிவு.<br>ii. வேலைச் சூழலின் அளவைகளை எடுப்பது பற்றிய அறிவு<br>iii. இரசாயனப் பொருட்களும் அவற்றின் தாக்கங்களும் பற்றிய அறிவு.<br>iv. அதிர்வு, வெப்பம், மின்னேற்றமடைதல் (ionizing) மின்னிறக்கமடைதல் (non ionizing) கதிர்வீச்சு ஆகியவை பற்றிய அடிப்படையான அறிவு.<br>v. பகுப்பாய்வு முறைகளினூடாக இரசாயனப் பதார்த்தங்களை அடையாளங் காணுதல்<br>vi. ஆய்வுகூட உபகரணங்கள் பற்றிய அறிவு |
| | (c) கட்டிடப் பரிசோதகர்<br>I. கட்டிடங்களைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல் பற்றிய அறிவு<br>II. அளவுகளைப் (quantities) பெற்று, மதிப்பீடுகளைத் தயாரித்தல் ; அளவைகளை (measurements) எடுத்தலும் மட்டங்களை (levels) அளவிடுதலும் பற்றிய அறிவு<br>(d) படவரைவாளர் |

| | |
|---|---|
| | I. மதிப்பீடுகளைத் தயாரித்தல் தொடர்பான அறிவு; மதிப்பீடுகளைத் தயாரித்தல><br>II. உபகரணம் மற்றும்திட்டப்படங்கள் வரைதல் மீதான அறிவு மற்றும் கட்டிடத் தொழில்நுட்பம் மீதான அறிவு. |

9.0 பொதுவான நேர்முகப் பரீட்சை

பொதுவான நேர்முகப் பரீட்சை, தகைமைகளைப் பரிசோதிப்பதற்காக மாத்திரமே நடாத்தப்படும் என்பதுடன், புள்ளிகளேதும் வழங்கப்பட மாட்டாது.

குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவது, நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக எடுத்துக்கொள்ளப்படலாகாது.

10.0 பரீட்சைக் கட்டணம் :-

பரீட்சைக் கட்டணமாக ரூ. 500.00 அறவிடப்படும். அது விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்பதாக, இலங்கை வங்கி, நாராஹேன்பிட்டி கிளையில் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் கணக்கு இல 0071451995 இற்கு வரவிடத்தக்கதாக செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரியின் பெயரில் பெறப்படும் வங்கி வைப்புச்சீட்டு விண்ணப்பப் படிவத்தின் உரிய குறித்த இடத்தில்இலகுவில் அகற்ற முடியாத வகையில் உறுதியாக ஒட்டப்படல் வேண்டும்.

(வங்கி வைப்புச் சீட்டின் பிரதி ஒன்றை தம்வசம் வைத்துக் கொள்வது பிரயோசனமாக அமையும்)

| |
|---|
| குறிப்பு – மேலும், ஒரு முறை செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது இப்பரீட்சை இரத்துச் செய்யப்பட்டாலன்றி எக்காரணம் கொணடும் திருப்பப் பெற்றுக் கொள்ளப்பட முடியாது .மேலும் இப் பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணம் இன்னொரு பரீட்சைக்குக் கட்டணமாகவும் மாற்றப்பட முடியாது. |

11.0 விண்ணப்பிக்கும் முறை

11.1 இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தைப் பயன்படுத்தி, தமக்கான விண்ணப்பப் படிவத்தை விண்ணப்பதாரியே தயாரித்துக் கொள்ள வேண்டும். அது 21 x 29 செ.மீ. (A4) அளவு கடதாசிகளின் இரு பக்கங்களிலும், 1.0 – 8.0 ஆகியன முதற்பக்கத்திலும், 9.0 – 13.1 ஆகிய இரண்டாம் பக்கத்திலும், 13.2 – 14.0 ஆகியன மூன்றாம் பக்கத்திலும், 15.0 – 16.0 ஆகியன நான்காம் பக்கத்திலும், 17.0 – 18.0 ஆகியன ஐந்தாம் பக்கத்திலும், 19.0 ஆறாம் பக்கத்திலும் வரத்தக்கதாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அவர்கள் சேவைபுரியும் பிரிவின்/ அலுவலகத்தின் தலைவரினால் சான்றுபடுத்தப்பட்டு 2021 ஓகத்து மாதம் 13 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்போ தொழில் ஆணையாளர் நாயகதிற்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

11.2 விண்ணப்பப் படிவங்கள் விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே தயாரிக்கப்பட வேண்டும்.

11.3 மாதிரி விண்ணப்பத்துடன் ஒத்திராத மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித முன்றிவித்லுமின்றி நிராகரிக்கப்படும்.

11.4 இப்பரீட்சையானது கொழும்பீல் அமைக்கப்படும் பரீட்சை மண்டபங்களில் மாத்திரம் 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நடைபெறும்.

11.5 விண்ணப்பப் படிவம் கிடைத்தமையிட்டு எவ்வித அறிவித்தலும் வழங்கப்பட மாட்டாது. தபாலில் காணாமற்போகும் விண்ணப்பங்கள் தொடர்பான முறைப்பாடு ஏதும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

11.6 பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படுதலானது, விண்ணப்பதாரி பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படுவதாகக் கொள்ளப்படலாகாது.

11.7 “தொழில் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ் உதவியாளர் - தொழில் நுட்பச் சேவை வகையின் .................... பதவிக்கு ஆட்சேர்த்தல் “ என, விண்ணபத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட வேண்டும். இதில் விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் பதவிப் பெயர் இதிலுள்ள இடைவெளியில் சேர்க்கப்பட வேண்டும்.

11.8 விண்ணப்பிக்கும்போது விண்ணப்பதாரி கொண்டிருக்கும் பதவியும் வேலை செய்யும் இடமும் இப்பரீட்சைக்காக எல்லா வகையிலும் கவனத்திலெடுக்கப்படும். விண்ணப்பித்த பின்னர் அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

11.9 பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பும், அல்லது நிரப்பாமல் விடும், அல்லது அவற்றில் ஒரு பகுதியை மாத்திரம் நிரப்பும் தீர்மானத்தையும், இது தொடர்பான மற்றைய எல்லா விடயங்களையும் பற்றிய தீமானங்களையும் எடுப்பதற்கான இறுதி அதிகாரம் தொழில் ஆணையாளர் அதிபதிக்கே உள்ளது.

12.0 பரீட்சைக்குத் தோற்றுதல்.

(அ) தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி, எல்லா வகையிலும் ப‘ர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பும் விண்ணப்பதாரிகளுக்கு,பரீட்சைத்தினமான 2021.09.26 ஆந் திகதிக்கு ஒரு கிழமைக்கு

முன்பாக பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவார். தனது அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தியொருவர் தனக்குரிய பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அவ்வாறு பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தனது அனுமதி அட்டையை, அதில் தனது சான்றுப்படுத்தப்பட்ட கையொப்பத்துடன், பரீட்சை நடைபெறும் தினத்தன்று பரீட்சை மண்டப பிரதான மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(இ) அனுமதி அட்டைகள் பரீட்சை நடைபெறும் தினமான 2021.09.26 ஆந் திகதியிலிருந்து ஒரு கிழமைக்கு முன்னர் அனுமதி அட்டைகிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் 0112786541 அல்லது 0112786542 என்ற தொலைபேசி ஊடாக தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர்அதிபதி அவர்களுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும். உங்களிடமிருக்கும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் பதிவுத் தபால் பற்றுச் சீட்டு மற்றும் விண்ணப்ப படிவம் ஆகியவற்றின் சான்றுப்படுத்திய பிரதிகளுடன் தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகத்துடன் தொடர்பு கொள்ளுதல் மிகவும் பயனுடையதாகும்.

13.0 பரீட்சார்த்தியின் ஆளடையாளம்

பரீட்சை மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரைத் திருப்திப்படுத்தும் வகையில் பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், தமது ஆளடையாளத்தை நிரூபிக்கும் வகையில், பின்வரும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
(இ) செல்லுபடியாகும் வாகன அனுமதிப்பத்திரம்

14.0 பொய்யான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கான தண்டனை

பரீட்சார்த்தியொருவர் எழுத்துப் பரீட்சைக்குத் தகுதியற்றவரெனக் காணப்பட்டால், பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அவரது தகைமை, பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னரோ, அல்லது பரீட்சை எழுதும்போதோ, அல்லது பரீட்சைக்குப் பின்னரோ இரத்துச் செய்யப்பட இடமுண்டு. மேலும், தெரிந்துகொண்டே பொய்யான தகவல்களைச் சமர்ப்பிக்கும் அல்லது வேண்டுமென்றே ஏதேனும் முக்கியமான தகவலை மறைக்கும் விண்ணப்பதாரி, பின்னர் சேவையிலிருந்து பதவி நீக்கத்துக்கு ஆளாக நேரிடலாம்.

15.0 இந்த அறிவித்தலில் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் ஏதேனும் மாற்றுபாடுகள் காணப்படின், சிங்கள மொழியிலான அறிவித்தலே கவனத்திலெடுக்கப்பட வேண்டும்.

**தொழில் ஆணையாளர் நாயகம்**

தொழில் திணைக்களம்

கொழும்பு – 05

2021 ஆம் ஆண்டு.............;மாதம் ...........ஆந் திகதி

மாதிரி விண்ணப்பப் படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**தொழில் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர்- தொழில்நுட்ப சேவை வகையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2021**

01. மொழி - பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்:
சிங்களம் - 1 (உரிய இலக்கத்தைப் கூட்டினுள் இடுக)
தமிழ் - 2
ஆங்கிலம் - 3

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப் படிவம் நிரப்பப்பட வேண்டும்.

02.
2.1. முதலெழுத்துக்களுடன் பெயர்: (முதலெழுத்துக்கள்இறுதியில வருமாறு)
..........................................................................................
(ஆங்கில பெரிய எழுத்தில்) உ-ம்: (SILVA A.B.D.P.A)

2.2. முழுப்பெயர்:............................................................................................................
(ஆங்கில பெரிய எழுத்தில்)
2.3. முழுப்பெயர்:............................................................................................................
(சிங்களத்தில் ; தமிழில்)

03.
3.1.அலுவலக முகவரி:(ஆங்கில பெரிய எழுத்தில்) (அனுமதி அட்டை இம்முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும்)..........................................................................................

3.2. அலுவலக முகவரி : (சிங்களத்தில்/;தமிழில்)...............................

3.3. சொந்த முகவரி:(சிங்களத்தில்/
தமிழில்).............................................................................

04. பால் : (ஆண் -0 , பெண் -1)
(உரிய இலக்கத்தைப் கூட்டினுள் இடுக)

05. தே.அ.அ. இல. | | | | | | | | | | | | | :

06.விவாக நிலை : (விவாகமாகாதவர் - 1, விவாகமானவர் -2)
(உரிய இலக்கத்தைப் கூட்டினுள் எழுதுக)

07.7.1.பிறந்த திகதி : வருடம் | | | | | மாதம் | | | நாள் | | |

7.2. 13/08/2021 இல் வயது:

வருடம் | | | | | மாதம் | | | நாள் | | |

**08.** தொலைபேசி இல: | | | | | | | | | | |

09. 13. 08. 2021 இல், உங்களது பதவிக்கு / சேவைக்கு / தரத்திற்கு உரிய தகைமை பெற்ற பரீட்சையில் / நேர்முகப் பரீட்சையில் தோற்றிய மொழி மூலம் எதுவென்பதைக் குறிப்பிடுக ..........................................................................................................

10. 13. 08. 2021 இல், இந்த வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 3 இன் பிரகாரம், எல்லாத் தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ளீர்களா? .............................

11. விண்ணப்பிக்கும் பதவி (உரிய இடத்தில்✓என குறிப்பிடுக)

| இல. | பதவி | |
|---|---|---|
| 1. | விரல் அடையாளம் பரிசோதிக்கும் அலுவலர் | |
| 2. | ஆராய்ச்சி உதவியாளர் | |
| 3. | கட்டிடப் பரிசோதகர் | |
| 4. | படவரைஞர் | |

12. வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 3.0 இன் பிரகாரம் விண்ணப்பிக்கும் வகுப்பு. (உரிய இடத்தில்✓என குறிப்பிடுக)

| | | |
|---|---|---|
| 1. | பயிற்சிக்குரிய வகுப்பு (இரண்டு வருட பயிற்சிக்காலம்) | |
| 2. | பயிற்சிக்குரிய வகுப்பு (ஒரு வருட பயிற்சிக்காலம்) | |
| 3. | வகுப்பு III (நேரடி ஆட்சேர்ப்பு) | |

13. கல்வித் தகைமைகள்:

13.1 . க.பொ.த. (சா.த.) பரீட்சை: (முதலாவது தடவை)

(i) பரீட்சையின் வருடமும் மாதமும்: ...............................................................

(ii) சுட்டிலக்கம்:...........................................................................

(iii) பெறுபேறுகள்:.......................................................................

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

13.2 க.பொ.த. (சா.த.) பரீட்சை: (இரண்டாவது தடவை)

(i) பரீட்சையின் வருடமும் மாதமும்:.............................................................................

(ii) சுட்டிலக்கம்:..........................................................................................

(iii) பெறுபேறுகள்:......................................................................................

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

13.3 . க.பொ.த. (உ.த.) பரீட்சை

(i) பரீட்சையின் வருடமும் மாதமும்:.............................................................................

(ii) சுட்டிலக்கம்:..........................................................................................

(iii) பெறுபேறுகள்:......................................................................................

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| | | |

14. வாண்மைத்துவத் தகைமைகள்

| பயிற்சிநெறி | சான்றிதழ் வழங்கிய நிறுவனம் | பயிற்சிநெறியின் காலம் | சான்றிதழின் இலக்கமும், செல்லுபடியாகும் திகதியும் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

15. அனுபவம்:

15.1 இப்பரீட்சையின் பரீட்சார்த்தியாக நீங்கள் வருவதற்கான தகைமைக்குரிய சேவை;தரம் (வகுப்பு, தரம் அல்லது பிரிவு, ஏதுமிருப்பின்):..........................................

15.2 தற்போது வகிக்கும் பதவி:..........................................................................................................

15.3 இப்பதவி தொழில் திணைக்களத்தின் திணைக்களப் பதவியா?

ஆம்; இல்லை

15.4 தரம்: ................................

15.5 வகுப்பு ; பிரிவு:........................................................

15.6 பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி:..........................................................

15.7 பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி:............................................

15.8 சம்பளக் குறியீட்ட இல.: ..................................................................

15.9 சம்பள அளவுத்திட்டம்: ......................................................................

15.10 இதன் அறிவித்தலின் பந்தி 03 இன் ஏற்பாடுகளின் பிரகாரம், ................ 2021 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றில் முனைப்பானதும் திருப்பதிகரமானதுமான சேவைக்காலம்: ..............................................................................................

15.11 இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமையைப் பெறுவதற்கு பல சேவைகள் உரியதாக இருப்பின், அவற்றின் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைகளின் விபரங்களை பின்வரும் அட்டவணில் தருக.

| சேவையின் ; தரத்தின் பெயர் | பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளக் குறியீடு (உ-ம்: PL1 – 2016A) | நியமனத் திகதி | உறுதிப்படுத்தப்பட்ட திகதி |
|---|---|---|---|
| (i) | | | |
| (ii) | | | |
| (iii) | | | |
| (iv) | | | |

16. பரீட்சைக் கட்டணம்:

16.1 செலுத்திய தொகை:..............................................................

16.2 பரீட்சைக்கட்டணம் செலுத்திய வங்கிக் கிளை: ................................

16.3 செலுத்திய திகதி: ..........................................

**பரீட்சைக்கட்டணம் செலுத்திய வங்கி வைப்புச் சீட்டினை உறுதியாக ஒட்டவும்**

**(அதன் நிழல் பிரதி ஒன்றைத் வைத்திருத்தல் பயனுடையதாகும்)**

17 விண்ணப்பதாரியின் சான்றிதழ்:

வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 3.3 II இன் பிரகாரம், 13.08.2021 ஆம் திகதியன்று

முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவையைப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும், 13.08.2021 ஆம் திகதிக்கு நேர் முந்தைய ஐந்து வருட காலத்தினுள் எல்லா சம்பள உயர்வுகளையும் உழைத்துப் பெற்றுள்ளேன் எனவும், அக்காலப்பகுதியினுள் எவ்விதமான ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் (கட்டளைகளும் எச்சரிக்கைகளும்) ஆட்படவில்லை எனவும் நான் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

மேலும்,......................................................................ஆகிய நான் இதற்குரிய வர்த்தமானி அறிவித்தலிலுள்ள விதிகள் விதிமுறைகள் யாவற்றினதும் பிரகாரம் இந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு ˙ தகைமையைக் கொண்டுள்ளேன் எனவும், எனது அறிவிற்கு எட்டியவரை இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

இப்பரீட்சையின் விதிமுறைகளுக்குக் கட்டுப்படுவதற்கு நான் சம்மதிப்பதுடன், அவ்வாறே, இப் பரீட்சைக்குரிய ஏற்பாடுகளைக் கொண்டுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம், நான் தகுதியற்றவரெனக் காணப்பட்டால், இப் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின்போதோ, அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சைக்கான தகைமையை நான் இழக்கச் செய்வதற்கு எடுக்கப்படத்தக்க முடிவை, எவ்வித நட்டஈடுமின்றி ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறேன். மேலும், இப்பரீட்சையை நடாத்துவதிலும் இதன் பெறுபேறுகளை வெளியிடுவதிலும் தொழில் ஆணையாளர் அதிபதியால் வழங்கப்படும் விதிமுறைகளுக்கு உட்படுவேன் என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

..............................................

திகதி : ............... விண்ணப்பதாரியின் கையொப்பம்

18 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் (வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 10 (d)இன் பிரகாரம்) இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு;திருமதி;செல்வி

......................................................(விண்ணப்பதாரியின் முழுப்பெயர்) எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை இதில் ஒட்டியுள்ளார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன். அவர் தனது கையொப்பத்தை என் முன்னிலையில்........................ ஆம் திகதியன்று இட்டார்.

திகதி: ........................... ......................................................

விண்ணப்பதாரியின்கையொப்பத்தைஉறுதிப்படுத்துபவரது கையொப்பம்

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரது முழுப் பெயர் :-

பதவி :-

முகவரி :-

(உத்தியோகப‘ர்வ பதவி முத்திரை இடப்பட வேண்டும்)

19 திணைக்களத் தலைவரது சான்றிதழ் (விண்ணப்பதாரியின் தளியாள் கோவையின் பிரகாரம்)

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு;திருமதி;செல்வி ...................................... என்பவர் தொழில் திணைக்களத்தில், ........................................................................ என்னும் பதவியில் கடமையாற்றுகிறார் என்பதை இத்தால் சான்றுப்படுத்துகிறேன். 13.08.2021 ஆம் திகதிக்கு நேர் முந்தைய ஐந்து வருட காலத்தினுள் அவர் தனது சம்பள உயர்வுகள் அனைத்தையும் உழைத்துப் பெற்றுள்ளார் என்பதையும், அக்காலப்பகுதியினுள் எவ்விதமான ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் (எச்சரிக்கை தவிர) அவர் ஆட்படவில்லை என்பதையும்,வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 3 இன் பிரகாரம் அவர் திருப்திகரமானதும் முனைப்பானதுமான ............................. (மூன்று / ஐந்து) வருட சேவைக்காலத்தைப் ப'ர்த்தி செய்துள்ளார் என்பதையும் இத்தால் மேலும் சான்றுப்படுத்துகிறேன். வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் எனவும், பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய பணம் செலுத்திய வங்கிக் கூற்றை இதில் ஒட்டியுள்ளார் எனவும், இவ்விண்ணப்பத்தில் தனது கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் மேலும் சான்றுப்படுத்துகிறேன்.

.............................................................................

திகதி: திணைக்களத் தலைவரது; அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரது கையொப்பம்

பெயர்:-

பதவி:-

(உத்தியோகபூர்வ பதவி முத்திரை இடப்பட வேண்டும்)